# அஷ்டவாக்கரா

## சாந்திப்பிரியா



அஷ்டவாக்கரா யார்? அவர் அருணை என்ற முனிவருக்கு சீடர் ஆவார். அவரைக் குறித்த செய்தி ராமாயணம் மற்றும் மஹாபாரதத்தில் வருகின்றது. முனிவர் யக்யவல்யகர் அருணை முனிவரின் சீடர். யக்யவல்யகருடைய சீடரே ஜனக மன்னன். அஷ்டவாக்கர கீதை என்பது பிரும்ம ஞானம், ஆத்மா மற்றும் மாயை என்பதைக் குறித்த விளக்கத்தை ஜனக மன்னனுக்கு தந்த போதனை நூல் ஆகும்.

அஷ்ட கோண (எட்டு கோணல்களைக் கொண்ட) உடலை கொண்டவராக பிறந்திருந்த அஷ்டவாக்கரா வளர்ந்து பெரியவராகி பல விவாதங்களில் கலந்து கொண்டு தனக்கென பெருமை தரும் தனி இடத்தை பெற்று இருந்தார். அவருடைய ஞானத் திறமையைக் கண்ட ஜனக மன்னன் அவருடைய சிஷ்யராகவே மாறி விட்டார்.

அருணை முனிவர் ஒரு ஆஸ்ரமத்தை நடத்தி வந்தார். அவருடைய சீடரே அஷ்டவாக்கராவின் தந்தையான கோடா என்பவர். அஷ்டவாக்கராவின் தாயார் கர்பமுற்று இருந்தபோது ஒருமுறை அவருடைய தந்தை எட்டு வேத உச்சாடனங்களை பிழையாக உச்சரித்தபோது அவர் வயிற்றில் சிசுவாக இருந்த அஷ்டவாக்கரா அவற்றை சுட்டிக் காட்டியதினால் கோபமுற்ற அவருடைய தந்தை அவர் எட்டு கோணலான உடலுடன் பிறக்க வேண்டும் என சாபமிட்டு விட்டதினால் அஷ்டவாக்கரா மார்பு, முகம், காய், கால்கள், முட்டி என அனைத்து இடங்களிலும் கோணலான உடலுடன் பிறந்தாராம். அதே நேரத்தில் அஷ்டவாக்கரா அவரது தாயாரின் வயிற்றில் சிசுவாக இருந்தபோது அவரது தந்தை கோடா மூலம் பல ஆன்மீக போதனைகளை கற்றுக் கொண்டாராம்.

சிறுவயதில் ஒருமுறை அஷ்டவாக்கரா தனது தந்தையுடன் அரச சபைக்கு சென்றார். அப்போது ஜனக மன்னன் சபையில் கூட்டப்பட்டு இருந்த மாபெரும் புலவர்கள் மற்றும் அறிஞ்சர்கள் இடையே பல விவாதங்கள் நடை பெற்றுக் கொண்டு இருந்தன. அவற்றை கேட்டுக் கொண்டு இருந்த அஷ்டவாக்கரா ஒரு கட்டத்தில் தைரியமாக எழுந்து அனைவரது வாதங்களும் ஏற்கப்பட முடியாத வெற்று வாதங்கள் என்பதாக கூற அனைவரும் அதிர்ந்து நின்றார்கள். கூடி இருந்த அனைத்து அறிஞர்களையும் அஷ்டவாக்கரா அவமானப்படுத்தி விட்டதாக எண்ணிய மன்னன் ஜனகரோ அவர் கூற்றை நிரூபிக்க வேண்டும் இல்லை என்றால் அவரை தான் கொன்று விடுவேன் என சீறினார். அதைக் கேட்ட அஷ்டவாக்கராவோ கவலையே படாமல் மன்னனை தனியே வனத்துக்கு வருமாறும், அங்கு அவருக்கு தான் கூறியதை நிரூபிப்பேன் என்றும் கூறினார். அதைக் கேட்ட மன்னனும் அதை ஏற்றுக் கொண்டு கானகத்துக்கு சென்று அஷ்டவாக்கராவுடன் பல வருடங்கள் தங்கி இருந்தது போன்ற உணர்வை அடைந்து, தனது அனைத்து சந்தேகங்களுக்கும் விளக்கங்களை பெற்றாராம். அதனால் அவர் ஞானம் அடைந்து ராஜ்யத்துக்கு திரும்பி ஆட்சி பீடத்தில் அமர்ந்து கொண்டு மேலும் சிறப்பான முறையில் ஆண்டு வந்தாராம்.

ஜனக மன்னனது அரச சபையில் ஒரு பெரிய வித்வான் இருந்தார். அவருடன் விவாதம் நடத்தி தோல்வியுறும் பண்டிதர்களை தண்ணீரில் மூழ்கடித்து மரணம்

அடைய வைப்பது அவரது ஒரு நிபந்தனை. அப்படி அவரால் சுமார் ஆயிரத்தை தொடும் அளவில் பண்டிதர்கள் உயிரை இழந்து இருந்த நிலையில், அஷ்டவாக்கராவின் தந்தையும் ஒருமுறை அவருடன் செய்த வாதத்தில் தோற்று விட்டதினால் தண்ணீரில் மூழ்கி மரணத்தை அடைய வேண்டி இருந்தது. அதைக் கேள்விப்பட்ட அஷ்டவாக்கரா அந்த பண்டிதருடன் தானே விவாதம் செய்ய மன்னனிடம் கேட்டபோது அவர் உடலின் கோணலைக் காட்டி மற்றவர்கள் கேலி செய்தார்கள். அஷ்டவாக்கரா தன்னை கேலி செய்தவர்களிடம் கூறினார் ' ஒரு ஆலயத்தினுள் பிரதிஷ்டை செய்யப்பட்டு உள்ள தெய்வத்தின் சக்தியை அந்த ஆலயத்தின் உயரமோ அல்லது உருவோ நிர்ணயிப்பது இல்லை. அதை போலவேதான் என் உருவத்திற்கும் எனக்குள் உள்ள ஆத்மனுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை ' என்று கூறிவிட்டு அந்த பண்டிதருடன் விவாதம் செய்து அவரை தோற்கடித்தார். அதைக் கண்டு வியந்து போன மன்னனும் அவருக்கு என்ன தண்டனை தர வேண்டும் என்று கேட்டபோது, மற்றவர்களுக்கு அந்த பண்டிதர் என்ன தண்டனை தந்தாரோ அதே தண்டனையை அவரும் பெற வேண்டும் என்று அஷ்டவாக்கரா கூறியவுடன், அந்த வித்வானும் அடுத்த கணமே தன்னுடைய சுய ரூபத்தைக் காட்டிக் கூறினார் ' மன்னா நான் வருண பகவானின் புதல்வர் ஆவேன். என் தந்தை உலக நன்மைக்காக செய்யும் ஒரு யாகத்திற்கு ஆயிரம் பண்டிதர்கள் தேவையாக இருந்ததினால் விவாதம் செய்து தோற்றவர்களை மேலுலகத்துக்கு அனுப்பினேன். இன்றோடு என் தந்தையின் யாகமும் நிறைவடைந்து விடும் என்பதினால் அனைவரையும் விடுதலை செய்கிறேன் என்று கூறி தான் தண்ணீரில் மூழ்கடித்து மரணத்தை தந்த அனைவரையும், அஷ்டவாக்கராவின் தந்தையையும் சேர்த்தே உயிர் பிழைக்க வைத்தார். அதன் பின் அஷ்டவாக்கராவின் தந்தை அவரை சாமான்னா எனும் நதியில் குளித்து எழுமாறு கூறியவுடன், அஷ்டவாக்கராவும் அந்த நதியில் குளித்து விட்டு வர அவரது உடல் மற்றவர்களது உடலைப் போலவே நல்ல சீரான நிலையில் ஆகி விட்டதைக் கண்டு வியந்தார்.

அஷ்டவாக்கர கீதை என்பது ஜனக மன்னனுக்கும் அஷ்டவாக்கராவுக்கும் இடையே நடைபெற்ற உரையாடல். அதன் மூலம் ஞானம், ஆத்மா, ஆசையற்ற தன்மை மற்றும் முக்தி போன்றவற்றை ஜனக மன்னன் அறிந்து கொண்டான். அப்படி உபதேசம்

பெற்ற ஜனக மன்னன் ஆத்ம ஞானம் பெற்றதாக கூறுகின்றார்கள். பிரும்ம ஞானம் பெறுவதற்கு அதிக நேரம் தேவை இல்லை. குதிரை ஏறும் ஒரு மனிதன் குதிரையின் சேணத்தில், ஒரு காலை வைத்து மற்றொரு காலை அடுத்த பக்கத்து சேணத்தின் மீது வைக்கும் நேரத்திற்குள் பிரம்ம ஞானம் பெறலாம் என்ற உண்மையை விளக்கும் வகையில் கானகத்திற்கு வந்த ஜனக மன்னனை குதிரையின் மீது இருந்து கீழே இறங்கி, அதன் பின் மீண்டும் மேலே ஏறுமாறு அஷ்டவாக்கரா கூறினார். அப்படி குதிரையை விட்டு கீழ் இறங்கிய ஜனக மன்னன், மீண்டும் குதிரையின் சேணத்தில் ஒரு காலை வைத்து, அடுத்த காலை அடுத்த பக்கத்தில் எடுத்து வைக்கும் முன்னரே அத்தனை கேள்விகளும் கேட்கப்பட்டு பதிலும் பெறப்பட்டதாகவும், அத்தனை காலமும்- வருடங்களும் - ஜனக மன்னன் ஒரு காலை குதிரையின் சேணத்தின் மீது வைத்து அடுத்த காலை ஆகாயத்தை நோக்கி வைத்திருந்த நிலையிலேயே, தன்னை மறந்த நிலையிலேயே இருந்து ஆத்ம ஞானம் பெற்றாராம்.

# Ashtavakkara

## Santhipriya



Who is Sage Ashtavakkara? He was the grandson of Vedic sage Aruni. Sage Ashtavakkara's name figures both in Ramayana and Mahabharata. Sage Yagyavalkya was disciple of Sage Aruni and King Janaka, the disciple of Sage Yagyavalkya. The Ashtavakkara Gita elucidates the meaning of the Supreme Reality, Brahman, the self-called Atman, soul and Maya, the illusion.

The Sage Ashtavakkara derived the name since he was born with eight different deformities- ashta meaning eight and vakra meaning deformities. After he grew up, Ashtavakkara participated in many public discussions and debates and earned a great acclaim. King Janaka was personally impressed by his knowledge on the Vedas and erudition and became his disciple.

As per the legend Sage Aruni, taught Vedas in his ashram. Ashtavakkara's father Kahoḍa was one of the students of Sage Aruni and married his master's own daughter later. When Ashtavakkara's mother was pregnant, she heard the chant of the Vedas coming from her stomach and learnt the correct recitation too. Once when her husband Kahoda (father of Ashtavakkara) erred in correct intonation of Vedas, the foetus (Ashtavakkara) spoke from the womb and asked his father to correct the eight mistakes which he intonated while reciting the Vedic Mantras. Kahoda got angry and cursed his son who was in his wife's womb to be born with eight deformities, hence the boy was born with eight deformities like his feet, hands, knees, chest and neck etc bent. At the same time when Ashtavakkara was in his mother's womb, various teachings were expounded to him by his father Kahoda which made Ashtavakkara gain tremendous mastery.

Once when Ashtavakkara was still a very young, he accompanied his father to a great debate which had been organized by King Janaka. Every day after the King finished his temporal duties, he would listen to the discourses and debates of different scholars even if the debates were marathon. The debate began and argument was underway between the best scholars when in the midst of their discussion, Ashtavakkara intervened and objected to the views of the scholars expressing that their discussions were all empty talks and views. Mistaking that Ashtavakkara had insulted the assembled great scholars, King Janaka became angry and warned Ashtavakkara that he should substantiate what he said lest he would be killed. Ashtavakkara agreed to prove his point provided the King came to the forest alone where he would explain. King Janaka agreed and went to the forest, met him, stayed with him for only some time, but

felt as though he had stayed for many days and years and got enlightened before returning back to the Kingdom to govern it with greater wisdom.

There was a Brahmin scholar in the courtyard of Janaka. He used to debate with scholars and those who got defeated in the debate used to be sunk in water and done to death. Ashtavakkara's father too met the same fate and died at the hands of the Brahmin scholar. When Ashtavakkara came to know of the fate of his father, he decided to confront the scholar in debate and went to King Janaka's court and expressed his desire to debate with the scholar. His crooked form invited ridicule from others. However unmindful of the ridicule, Ashtavakkara explained to those assembled that the power of the deities in the Temple is not affected by how the temple is shaped or by its height, and similarly neither the shape of his own body nor its crookedness affect the Atman inside him. Later Ashtavakkara debated with the scholar and defeated him.

When King Janaka asked Ashtavakkara as to what punishment he should be given, Ashtavakkara suggested the same punishment given by the scholar to others be given to the scholar too. The scholar then revealed his true form to tell everyone that he was son of Lord Varuna who had come there in the disguise of a scholar, debated with Brahmin scholars, defeated them and sent them to heaven to take part in a Yagna performed by his father who needed 1000 Brahmin scholars to successfully complete the Yagna. Therefore those who were sunk in the water have not actually met death but were safe in heaven attending the Yagya. Since the Yagya has been concluded successfully, he released all those sent for the Yagya and produced them in the court to astonish everyone including father of Ashtavakkara who asked Ashtavakkara to take bath in river Saamanna to get back normal body like anyone else. Once Ashtavakkara

took bath in the river, he was astonished to find that his appearance had turned back to normal human body like others.

Ashtavakkara Gita is a is a short treatise ascribed to the great sage Ashtavakkara written in the form of a conversation between sage Ashtavakkara and king Janaka of Ramayana fame and through their dialogue the king Janaka attained enlightenment (wisdom). The most wonderful dialogue which took place, between Ashtavakkara and King Janaka on the nature of soul, reality and bondage and came to be known as the famous 'Ashtavakkara Gita', the fountain head of wisdom. In order to prove the point that one could attain enlightenment within the time taken to get on to the back of a horse, keeping one leg on the saddle and attempt to place the other leg on to the other side of the saddle, Ashtavakkara asked King Janaka to get down from the horse and then climb up again. By the time the King kept his leg over the saddle on one side and lifted the other to place on the other side, the stretched leg facing the sky remained stretched to years within which period King Janaka's doubts were cleared by Sage Ashtavakkara to enable the King attain wisdom. King Janaka did not feel discomfort while remaining in that position as he had lost himself in the conversation.